## கோவையில் 'ஏர் ஆம்புலன்ஸ்'

# தனியார் மருத்துவமனை சேவை தொடக்கம்

### ● அவசர கால சிகிச்சையில் புதிய மைல்கல்

■ கோவை

கோவை கங்கா மருத்துவமனையின் ஏர் ஆம்புலன்ஸ் சேவையானது மருத்துவத்துறையில் விபத்து, அவசர கால சிகிச்சைக்கான புதிய மைல்கல்லாக இருக்கும் என விமானப்படை தளபதி சீப் ஏர் மார்ஷல் பிரேந்தர்சிங் தனோவா பேசினார்.

இந்தியாவில் முதல்முறையாக மருத்துவமனை சார்ந்த ஏர் ஆம்புலன்ஸ் சேவையை கோவையில் உள்ள கங்கா மருத்துவமனை தொடங்கியுள்ளது. இந்த சேவையின் தொடக்கநிகழ்ச்சி, வட்டமலைப்பாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.



▲ கங்கா மருத்துவமனையின் ஏர் ஆம்புலன்ஸ் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார் இந்திய விமானப்படை தளபதி சீப் ஏர் மார்ஷல் பிரேந்தர் சிங்தனோவா. உடன் மருத்துவமனை நிர்வாகிகள். படம்:ஜெ.மனோகரன்

மருத்துவமனை இயக்குநர் எஸ்.ராஜசபாபதி வரவேற்றார். ஓய்வுபெற்ற விமானப்படை மருத்துவப் பணிகள் இயக்குநர் ஏர் மார்ஷல் அனில்பெல், கோவை மாநகரக் காவல் ஆணையர் ஏ.அமல்ராஜ், மேற்கு மண்டல காவல்துறைத் தலைவர் ஏ.பாரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முதன்மை விருந்தினராக நொய்டா வருமான வரித்துறை ஆணையர் எஸ்.கே.ஸ்ரீவத்ஸவா கலந்து கொண்டார்.

இதைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினரான இந்திய விமானப்படை தளபதி சீப் ஏர் மார்ஷல் பிரேந்தர் சிங் தனோவா, கங்கா மருத்துவமனையின் ஏர் ஆம்புலன்ஸ் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் இருந்து அந்த ஹெலிகாப்டர் இயக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஏர் ஆம்புலன்ஸின் சேவையை விளக்கும் வகையில், ஒத்திகை நடைபெற்றது. அதை அவர் பார்வையிட்டார்.

பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில், விமானப்படை ஏர் சீப் மார்ஷல் பி.எஸ்.தானோவா பேசியதாவது:

கங்கா மருத்துவமனையின் ஏர் ஆம்புலன்ஸ் சேவையானது இந்த மருத்துவமனைக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டின் மருத்துவ சேவைக்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

கோவையில் உள்ளவர்களுக்கு மட்டுமே கிடைத்துவந்த விரைவான சிறந்த மருத்துவ சிகிச்சை தற்போது, தொலைவில் உள்ளவர்களுக்கும் கிடைக்கும். மருத்துவத்துறையில் விபத்து, அவசர கால சிகிச்சையில் இந்த முயற்சி ஒரு மைல்கல்லாக இருக்கும்.

ஆபத்துக்காலத்தில் விரைந்து மேற்கொள்ளப்படும் இதுபோன்ற மருத்துவ உதவிகளை இந்திய விமானப்படையும் அங்கீகரிக்கிறது. 1999 கார்கில் போரின்போது காஷ்மீரின் ஸ்ரீநகர், அவந்திபூர் பகுதிகளில் போரால் பாதிக்கப்பட்டவர்களை சண்டிகர் விமானப்படை மருத்துவமனைக்கும், டெல்லி ராணுவ மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கும் கொண்டு வர இதுபோல ஹெலிகாப்டர்களை விமானப்படை பயன்படுத்தியது. அதன்பிறகு 2007-ல் இந்திய விமானப்படை, தனக்குச் சொந்தமாக அவசர கால மருத்துவ உதவி குழுவை ஏற்படுத்தியது. அதில் விமானப்படைக்குச் சொந்தமான 17 வானூர்திகள் இணைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் மூலம், நாட்டின் எல்லைகளில் பாதுகாப்புப் பணியில் உள்ள படையினருக்கு உடனடி மருத்துவ உதவி செய்ய முடிகிறது. அதைப் போல, பொதுமக்களுக்கான ஏர் ஆம்புலன்ஸ் சேவையை கங்கா மருத்துவமனை தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

கங்கா மருத்துவமனை இயக்குநர் எஸ்.ராஜசேகரன் நன்றி கூறினார். மருத்துவமனைத் தலைவர் ஜே.ஜி.சண்முகநாதன், நிர்வாக இயக்குநர் கனகவள்ளி சண்முகநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.